# எப்போது வேண்டுமானாலும் தேர்தல் வரலாம்; தயாராய் இருப்போம்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி



சென்னை – வானகரம் – ஸ்ரீவாரு திருமண மண்டபத்தில், நேற்று முன்தினம் (28.6.2026), மாலை, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், முன்னாள் அமைச்சர் பெஞ்சமின் தலைமையில் 5000–க்கும் மேற்பட்டோர் கழகத்தில் இணைந்த நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் கழகத் தலைவர் அவர்களுக்கு, பெஞ்சமின் பொன்னாடை அணிவித்து வாழ்த்துப் பொற்ற போது எடுத்த படம். உடன் கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., தலைமைக் கழக முதன்மைச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் கே.என். நேரு, சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன், முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு. நாசர், மதுரவாயல் பகுதிச் செயலாளர்கள் காரம்பாக்கம் க.கணபதி, நொளம்பூர் வே.ராஜன் உள்ளிட்டோர் இருந்தனர்.

அவருக்கு ஒரு ‘சேர்’ போட்டு உட்கார வைத்தோம். ஆனால், அந்தச் சேரை எடுத்துவிட்டு, தரையில் உட்கார்ந்து அந்த நாடகத்தைப் பார்த்தார். ஏன் என்றால், பின்னால் உட்கார்ந்திருப்பவர்களுக்குத் தெரியாது என்று சேரை அங்கிருந்து அப்புறப்படுத்திவிட்டு, தரையில் உட்கார்ந்து, மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் அந்த நாடகத்தைப் பார்த்தார் என்பது வரலாறு!

### இந்த இயக்கத்தின் தலைமைத் தொண்டனாக நான் உங்களை வரவேற்கிறேன்!

அன்று நான் ஒரு சாதாரணத் தொண்டனாக - இளைஞனாக இருந்தேன்; இன்று அதே இயக்கத்தின் தலைமைத் தொண்டனாக இருந்து, உங்கள் அனைவரையும் வருக வருக வருக என வரவேற்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன்.

நம்முடைய முன்னாள் அமைச்சர் பெஞ்ஜமின் அவர்களை, நீண்ட காலமாக நான் கவனித்து வருகிறேன். அவருடைய உழைப்பைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். அவர் அ.தி.மு.க.வில் இணைந்து பல ஆண்டுகள் உண்மையாக உழைத்தவர்; ஓயாமல் உழைத்தவர். எதைப் பற்றியும் கவலைப்படாமல் அஞ்சாமல் உழைத்தவர்; வேகத்தோடும், விவேகத்தோடும் உழைத்தவர்.

வில்லிவாக்கம் ஒன்றியச் செயலாளராக, சென்னை 145–ஆவது வார்டின் மாமன்ற உறுப்பினராக, மாநகராட்சியின் துணை மேயராகப் படிப்படியாக உயர்ந்து, சென்னை மாநகரம் முழுவதும் அறிமுகமானவர். 2016–ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் மதுரவாயல் தொகுதியில் வென்று, ஊரகத் தொழில் துறை அமைச்சராகச் செயல்பட்டிருக்கிறார். அவர் அமைச்சராக இருந்தபோது, நான் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருந்தேன். நாங்கள் கேள்விகள் கேட்கிற நேரத்தில், பல அமைச்சர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், பெஞ்ஜமின் அவர்கள் பதில் சொல்கிறார் என்று சொன்னால், நாங்கள் கொஞ்சம் உஷாராக இருப்போம். ஏன் என்றால், புள்ளி விவரத்தோடு, ஆதாரங்களோடு எதையும் ஆணித்தரமாக அழுத்தமாக எடுத்துச் சொல்லக் கூடியவர். அந்த இளைஞர் சட்டமன்றத்தில் அமைச்சராக இருந்து பதில் சொல்வதை நாங்கள் ரசித்ததுண்டு.

இப்படிப்பட்ட உழைப்பிற்கும் அனுபவத்திற்கும் சொந்தக்காரரான நம்முடைய அருமைச் சகோதரர் பெஞ்ஜமின் அவர்கள் கழகத்தை நோக்கி வந்திருப்பதில், உங்களை எல்லாம் விட நான் அதிக அளவில் மகிழ்ச்சி அடைகிறேன்.

### பெஞ்ஜமினுக்கு கழகத்தின் சார்பில் இதயப்பூர்வமான நன்றி!

அவர் ஏற்கெனவே அண்ணா அறிவாலயத்திற்கு வந்து, முறையாக உறுப்பினராகப் பதிவு செய்து, என்னைப் போன்ற நம்முடைய முன்னோடிகள் முன்னிலையில் வந்து சேர்ந்திருந்தாலும், இன்றைக்கு இந்த வட்டாரத்தில் இருக்கும் தோழர்களை, தாய்மார்களை, சகோதரர்களை - சகோதரிகளை, இளைஞர்களை எல்லாம் ஒன்று திரட்டி, கழகத்தில் இணையும் நிகழ்ச்சியாக, ஒரு மாபெரும் விழாவாக, இந்த வட்டாரத்தின் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாற்றில் பதிவாக இருக்கும் ஒரு நிகழ்ச்சியாக இதை நடத்திக் கொண்டிருக்கிறார். அதற்காக நான் மீண்டும் மீண்டும் தலைமைக் கழகத்தின் சார்பில், இந்த மாவட்டக் கழகத்தின் சார்பில், என்னுடைய இதயப்பூர்வமான நன்றியை பெஞ்ஜமின் அவர்களுக்கும், மற்றவர்களுக்கும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்!

### ‘கொள்கைதான் முக்கியம்’ என – கழகத்தில் சேர்ந்துள்ளீர்கள்!

பொதுவாக, ஒரு தேர்தல் முடிந்தவுடன், வெற்றி பெற்ற இயக்கத்தை நோக்கி நிறையப் பேர் சேர்வார்கள். எதிர்க்கட்சியில் இருந்து விலகி, ஆளுங்கட்சிக்குத்தான் நிறையப் பேர் சென்று சேர்வார்கள். ஆனால் இங்கு என்ன என்றால், எதிர்க்கட்சியாக இருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் நீங்கள் சேர்ந்திருக்கிறீர்கள் என்றால், நீங்கள் பதவிக்காக அல்ல; பவுசுக்காக அல்ல; பொறுப்புக்காக அல்ல; நீங்கள் எல்லாம் “கொள்கைதான் முக்கியம்” என்று உணர்வோடு வந்து சேர்ந்திருக்கிறீர்கள். அதுதான் பாராட்டப்பட வேண்டிய ஒரு விஷயம். உண்மையிலேயே பெருமைப்பட வேண்டிய விஷயம்.

திராவிட முன்னேற்றக் கழகம் வலிமையாக இருந்தால்தான், தமிழ்நாட்டைக் காப்பாற்ற முடியும் என்று நம்பி இந்த இயக்கத்தில் வந்து சேர்ந்திருக்கிறீர்கள்.

### அனைத்து தரப்பினரையும் கவர்ந்த கழக அரசின் திட்டங்கள்!

கடந்த ஐந்து ஆண்டுகளாக, எந்தத் துறையை எடுத்தாலும், இதுவரை தமிழ்நாடு கண்டிராத வளர்ச்சியை, நம்முடைய தமிழ்நாடு பார்த்தது. இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதாரம் கொண்ட மாநிலமாகத் தமிழ்நாட்டை நாம் உயர்த்தினோம். ‘தினமும் ஒரு திட்டம்’ என்று சொல்லத்தக்க வகையில் திட்டங்களை உருவாக்கினோம். அனைத்துத் தரப்பு மக்களையும் நாம் கவரும் வகையில் திட்டங்கள் தீட்டினோம். திட்டங்கள் மக்களிடம் சென்று சேர்ந்தன.

நமது ஆட்சியின் மீது இருந்த நம்பிக்கையால்தான், தமிழ்நாட்டை நோக்கிப் பல்வேறு மாநிலங்களிலிருந்து, பல்வேறு நாடுகளிலிருந்து உலக அளவில் மிகப் பெரிய நிறுவனங்கள் எல்லாம் வந்தன; தொழில் தொடங்கினார்கள். அதுமட்டுமல்ல, அனைத்து மாவட்டங்களிலும் வேலைவாய்ப்புகள் பெருகியது. அண்டை மாநிலங்களில் ஆட்சி செய்யும், அரசியல் ரீதியாக நமக்கு எதிரணியில் இருக்கும் தலைவர்கள்கூட இதனை வெளிப்படையாகப் பாராட்டினார்கள்; சில பேர் பொறாமைப்பட்டார்கள்.

ஆனால், இப்போது ஆட்சி மாற்றம் நடந்திருக்கிறது. ஆட்சி மாற்றம் நிகழ்ந்த ஒரே மாதத்திற்குள்ளேயே, தமிழ்நாடு இன்றைக்கு அதலபாதாளத்திற்குப் போகும் ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

தொழில் நிறுவனங்கள் இந்தப் புதிய ஆட்சியை நம்பித் தமிழ்நாட்டுக்கு வரப் பயப்படுகிறார்கள், தயங்குகிறார்கள்; அதனால், வேறு மாநிலங்களுக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். என்ன காரணம்?

சட்டம்-ஒழுங்கைப் பற்றிச் சொல்லவே தேவையில்லை. பாலியல் கொடுமைகள், போதை மருந்து நடமாட்டம், பெட்ரோல் குண்டு வீச்சு, அரிவாள் வெட்டுகள், கொள்ளைகள் மற்றும் அராஜகங்கள் - டி.வி.யைப் பார்த்தாலே, பேப்பரைப் படித்தாலே இந்தச் செய்திகள்தான் நம் கண்களில் படுகின்றன. அதிலும் குறிப்பாக, நிறைய குற்றங்களில் ஆளுங்கட்சிக்காரர்களே சம்பந்தப்பட்டு இருக்கிறார்கள். அதுதான் வேதனை!

### மக்களைத் திசைதிருப்பும் வேலையில் இன்றைய ஆட்சியினர்!

இன்னொரு பக்கத்தில், மின்வெட்டு, விவசாயிகள் போராட்டம் எனப் பல்வேறு பிரச்சினைகள். ஆனால், எதைப் பற்றியும் கவலைப்படாமல், “டேக் டைவர்ஷன்” என்று திசைதிருப்பும் வேலைகளில் இந்த ஆட்சியாளர்கள் நடந்து கொண்டிருக்கிறார்களே தவிர, இவர்களுடைய இந்த ‘டெக்னிக்’ மக்களுக்கு இப்போது புரிய ஆரம்பித்துவிட்டது. இப்போதுதான் பேச ஆரம்பித்திருக்கிறார்கள். “தவறு செய்துவிட்டோம்” என வாக்களித்தவர்களும் கஷ்டப்படுகிறார்கள்; வாக்களிக்காதவர்களும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களே தன்னெழுச்சியாகப் பல இடங்களில் இப்போது போராட ஆரம்பித்திருக்கிறார்கள். இன்றைக்கு அமைச்சர்கள் எங்காவது காரில் நிகழ்ச்சிக்குச் செல்லும்போது, வழிமறித்துக் கேள்வி கேட்க ஆரம்பித்துவிட்டார்கள். இந்தச் சூழலில், மக்களுக்குத் துணையாக நாம்தான் இருக்க வேண்டும்.

### தமிழ்நாட்டைக் காக்கும் பொறுப்பு நமக்கே அதிகம்!

தமிழ்நாட்டைக் காக்கும் பொறுப்பும் கடமையும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத்தான் அதிகமாக இருக்கிறது. ஏன் என்றால், நாம் பார்த்துப் பார்த்து வளர்த்த தமிழ்நாட்டை, சீரழிய விடக் கூடாது.

ஒரு தேர்தலில் வெற்றி வாய்ப்பை இழப்பது என்பது, ஏதோ பெரிய வீழ்ச்சி அல்ல. எத்தனையோ வெற்றியைப் பார்த்திருக்கிறோம்; எத்தனையோ தோல்வியையும் பார்த்திருக்கிறோம். தி.மு.க.வைப் போன்று, வெற்றி பெற்ற கட்சியும் கிடையாது; தோல்வி அடைந்த கட்சியும் கிடையாது. அதனால்தான் சொல்கிறேன், தி.மு.க.வின் இருப்பு என்பது வெறும் வாக்குச் சாவடிகளைத் தாண்டி, லட்சக்கணக்கான உடன்பிறப்புகளின் இதயங்களில் இருக்கிறது.

பேரறிஞர் அண்ணாவால் 1949–ஆம் ஆண்டு கொட்டும் மழையில் வட சென்னை ராபின்சன் பூங்காவில் தொடங்கி வைக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம், தலைவர் கலைஞர் அவர்களால் வளர்த்தெடுக்கப்பட்டு, இன்று வலிமையான அமைப்போடு இருக்கிறது.

உண்மைத் தொண்டர்களான உடன்பிறப்புகளின் வியர்வையாலும், இரத்தத்தாலும் உருவாக்கப்பட்டிருக்கும் இந்த இயக்கத்தை எந்தக் கொம்பனாலும் வீழ்த்த முடியாது; தொட்டுக் கூட பார்க்க முடியாது.

### கட்டமைப்பே கழகத்தின் பெரிய பலம்!

உடன்பிறப்புகளின் உழைப்பும், நமது இயக்கத்தின் கட்டமைப்பும்தான் கழகத்தின் பெரிய பலம். அதைத்தான் இந்த இயக்கத்தின் தலைமைத் தொண்டனாக நான் அதிகமான அளவிற்கு நம்புகிறேன்.

நீங்கள் நினைத்துப் பாருங்கள்... நாம் எத்தனையோ திட்டங்களை, எத்தனையோ சாதனைகளைச் செய்து முடித்திருக்கிறோம். உதாரணத்திற்கு ஒன்றிரண்டு மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

“மகளிர் உரிமைத் தொகை, நாம் ஆட்சிக்கு வந்தவுடன் வழங்குவோம்!” என்று சொன்னோம். அதேபோன்று, ஆயிரம் ரூபாய் மாதாமாதம் 15–ஆம் தேதி ஒவ்வொரு மகளிருக்கும் வங்கிக் கணக்கில் போடப்படுகிறது.

அதேபோன்று, பேருந்துகளில் பயணம் செய்யும் மகளிர் கட்டணமின்றிப் பயணம் செய்வதற்கான உத்தரவும் வழங்கப்பட்டு, அதுவும் நடந்து கொண்டிருக்கிறது. பள்ளிப் படிப்பை முடித்து, கல்லூரிக்குச் செல்லும் மாணவர்கள் - மாணவியர்கள், மேற்படிப்புக்குச் செல்லும் வசதியில்லாத குடும்பத்தில் லட்சக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள் என்பதை அறிந்து, அதற்காக தமிழ்ப்புதல்வன் - புதுமைப் பெண் திட்டங்களின் சார்பில் மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. அதேபோன்று, காலை உணவுத் திட்டம், இந்தியாவில் மட்டுமல்ல; உலகத்திலேயே எங்கும் கிடையாது. நம்மைப் பார்த்துதான் லண்டன் மாநகரத்திலும், கனடா நாட்டிலும் இன்றைக்கு அந்தத் திட்டம் நடந்து கொண்டிருக்கிறது. பல மாநிலங்களிலும் இப்போது நடக்கத் தொடங்கியிருக்கிறது.

### தமிழக வரலாற்றில் என்றைக்கும் நமது பெயர் நிலைத்திருக்கும்!

தமிழ்நாட்டிற்குத் ‘தமிழ்நாடு’ என்று சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டுவந்து பெயர் வைத்தபோது, “தமிழ்நாடு, தமிழ்நாடு, தமிழ்நாடு” என்று மூன்று முறை முழங்கி, “தமிழ்நாடு வாழ்க, தமிழ்நாடு வாழ்க” என்று சொல்ல வைத்து, அப்போது அண்ணா சொன்னார், “இந்தத் தமிழ்நாட்டிற்கு ‘தமிழ்நாடு’ என்று பெயர் இருக்கும் வரைக்கும், அண்ணாதுரை என்ற என்னுடைய பெயர் மக்கள் மனதில் இருக்கும். அதை யாராலும் மாற்ற முடியாது” என்று சொன்னார்.

அதுபோன்று, மகளிர் உரிமைத் திட்டமாக இருந்தாலும், மகளிருக்கு இலவசப் பேருந்துப் பயணத் திட்டமாக இருந்தாலும், காலை உணவுத் திட்டமாக இருந்தாலும், புதுமைப்பெண் திட்டமாக இருந்தாலும், தமிழ்ப்புதல்வன் திட்டமாக இருந்தாலும், இந்தத் திட்டங்களை யாராலும் நிறுத்த முடியாது. அந்தத் திட்டங்கள் இருக்கும் வரையில் இந்த அடியேன் ஸ்டாலின் பெயர் நிலைத்து நிற்கும். அதுதான் எனக்குப் பெருமை; அதுதான் இந்த இயக்கத்திற்குப் பெருமை; அதுதான் உங்களுக்கும் பெருமை!

எனவே, தமிழ்நாட்டின் வளத்திற்கும், நலத்திற்கும் உண்மையான காவல் அரண் தி.மு.க.தான் என்ற புகழைக் காப்பாற்றும் வகையில் நாம் தொடர்ந்து பணியாற்றுவோம்!

### கழகத்தின் வெற்றிக்கு இப்போதிருந்தே பாடுபடத் தொடங்குவோம்!

தேர்தல் எப்போது வேண்டுமானாலும் வரலாம்; விரைவில் வரலாம்; மூன்று மாதங்கள் கழித்து வரலாம்; ஆறு மாதங்கள் கழித்து வரலாம்; ஏன் என்றால், இப்போது நடைபெறும் ஆட்சி என்பது, மெஜாரிட்டியோடு அவர்கள் வெற்றி பெறவில்லை. ‘மெஜாரிட்டி’ என்றால் என்ன? 118–ஆவது வர வேண்டும். அவர்கள் வெற்றி பெற்றது 108 தான். தி.மு.க.தான் வெற்றி பெற வேண்டும்; ஸ்டாலின்தான் முதலமைச்சராக வேண்டும் என்று தமிழ்நாட்டு மக்கள் வாக்களித்தீர்கள் அல்லவா...! நம்முடன் இருந்த அந்தக் கூட்டணிக் கட்சிகளின் ஆதரவில்தான் இன்றைக்கு இந்த வண்டி ஓடிக் கொண்டிருக்கிறது. அவ்வாறு ஓடும் வண்டி, எங்கே சென்று நிற்கப் போகிறது என்று தெரியவில்லை. ஆனால், எப்போது எது நடந்தாலும் நாம் அதற்குத் தயாராக இருக்க வேண்டும். எந்த நேரத்திலும் தேர்தல் வரலாம்; எந்தச் சூழ்நிலையிலும் வரலாம்.

நாம் அதற்கு நூறு சதவீதம் தயாராக இருக்க வேண்டும்! எனவே, கழகத்தின் வெற்றிக்கு இந்த நிமிடத்திலிருந்தே உழைக்கத் தொடங்குவோம், பாடுபடுவோம், பணியாற்றுவோம் என்ற உறுதி எடுக்கும் நிகழ்ச்சியாக இந்த நிகழ்ச்சியை நாம் பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

### உண்மையாக உழையுங்கள்! அதற்கான அங்கீகாரம் தேடி வரும்!

எனவே, தாய்க்கழகத்தைத் தேடி வந்திருக்கும் முன்னாள் அமைச்சர் நம்முடைய இனிய சகோதரர் பெஞ்ஜமின் அவர்களையும், அவரோடு வந்து சேர்ந்திருக்கும் உங்கள் அனைவரையும் மீண்டும் ஒருமுறை வருக வருக! வருக! என்று வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உண்மையாக உழையுங்கள்; உங்களுக்கான அங்கீகாரம் நிச்சயம் உங்களைத் தேடி வரும்!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் - கழகத்தில் இணைந்தவர்களை வரவேற்று உரையாற்றினார்.



## வேகத்தோடும், விவேகத்தோடும் உழைத்தவர் பெஞ்ஜமின்!

**முன்னாள் அமைச்சர் பெஞ்ஜமின் அவர்களை, நீண்ட காலமாக நான் கவனித்து வருகிறேன். அவருடைய உழைப்பைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். அவர் அ.தி.மு.க.வில் இணைந்து பல ஆண்டுகள் உண்மையாக உழைத்தவர்; ஓயாமல் உழைத்தவர். எதைப் பற்றியும் கவலைப்படாமல் அஞ்சாமல் உழைத்தவர்; வேகத்தோடும், விவேகத்தோடும் உழைத்தவர்.**

**வில்லிவாக்கம் ஒன்றியச் செயலாளராக, சென்னை 145–ஆவது வார்டின் மாமன்ற உறுப்பினராக, மாநகராட்சியின் துணை மேயராகப் படிப்படியாக உயர்ந்து, சென்னை மாநகரம் முழுவதும் அறிமுகமானவர். 2016–ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் மதுரவாயல் தொகுதியில் வென்று, ஊரகத் தொழில் துறை அமைச்சராகச் செயல்பட்டிருக்கிறார். அவர் அமைச்சராக இருந்தபோது, நான் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருந்தேன். நாங்கள் கேள்விகள் கேட்கிற நேரத்தில், பல அமைச்சர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், பெஞ்ஜமின் அவர்கள் பதில் சொல்கிறார் என்று சொன்னால், நாங்கள் கொஞ்சம் உஷாராக இருப்போம். ஏன் என்றால், புள்ளி விவரத்தோடு, ஆதாரங்களோடு எதையும் ஆணித்தரமாக அழுத்தமாக எடுத்துச் சொல்லக் கூடியவர். அந்த இளைஞர் சட்டமன்றத்தில் அமைச்சராக இருந்து பதில் சொல்வதை நாங்கள் ரசித்ததுண்டு.**

**இப்படிப்பட்ட உழைப்பிற்கும் அனுபவத்திற்கும் சொந்தக்காரரான நம்முடைய அருமைச் சகோதரர் பெஞ்ஜமின் அவர்கள் கழகத்தை நோக்கி வந்திருப்பதில், உங்களை எல்லாம் விட நான் அதிக அளவில் மகிழ்ச்சி அடைகிறேன்.**